# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2026
## A031 – தமிழக வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஏழைகளின் ஊட்டி என அழைக்கப்படும் ஊர் எது?
2. சேர்வராயன் மலை எங்கு அமைந்துள்ளது?
3. கல்வெட்டுக்குரிய மொழி யாது?
4. நடுகல் என்றால் என்ன?
5. இரண்டாம் சங்கத்தில் எழுந்த இலக்கண நூல் எது?
6. அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவர் யார்?
7. கிழக்கு இந்திய கம்பெனியின் தலைமையிடம் எது?
8. கொடி காத்த குமரனின் ஊர் எது?
9. கட்ட பொம்மன் ஆண்ட பகுதி எது?
10. ஐரோப்பியர் காலத்தில் தமிழகத்தில் வணிகத் துறைமுகங்களாக இருந்தவை எவை?
11. தமிழகத்தில் இசுலாமியரை எதிர்த்து சிவாஜி கைப்பற்றிய கோட்டைகள் எவை?
12. மணியக்காரர் என்று அழைக்கப்படுவர் யார்?
13. பொன், கழஞ்சு, காணம் என்பன யாவை?
14. இருவகைக் கூத்துக்கள் யாவை?
15. உடன்கட்டை ஏறும் வழக்கம் நாயக்கர்கள் காலத்தில் இருந்ததா?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

16. சங்க காலம் மற்றும் தற்காலத் தமிழகத்தின் எல்லைகள் எவை?
17. தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.
18. நாயக்க மன்னர்கள் விதித்த வரிகளுள் எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
19. முதல் கர்நாடகப் போர் சிறு குறிப்பு வரைக.
20. குடவோலைத் தேர்வு முறை குறித்து எழுதுக.
21. தமிழகத்தை ஆண்ட மராட்டிய மன்னர்களுள் எவரேனும் இருவர் பற்றிக் குறிப்பு வரைக.
22. ஆங்கிலேயர் ஆட்சியில் வடிக்கப்பட்ட நாணயங்கள் குறித்தெழுதுக.
23. காமராஜர் ஆட்சியில் தமிழகத்தின் வளர்ச்சி குறித்தெழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

24. அ) சங்க இலக்கியங்கள் வாயிலாக நீவீர் அறியும் வரலாற்றுச் செய்தியினை விளக்குக.

அல்லது

ஆ) பல்லவர் ஆட்சி குறித்துக் கட்டுரை வரைக.

25. அ) நாயக்க மன்னர்கள் குறித்துக் கட்டுரை வரைக.

அல்லது

ஆ) மராட்டியர்களின் ஆட்சி அமைப்பினை விவரி.

26. அ) இசுலாமியர் படையெடுப்பு, ஆட்சி முறை குறித்து விளக்குக.

அல்லது

ஆ) விடுதலைக்குப் பிந்தைய தமிழக முதல்வர்கள் குறித்து கட்டுரை வரைக.

***